# ஞான உபதேச வினாவிடை

WESTMINSTER SHORTER CATECHISM
IN TAMIL

பெலின் குலசேகர்

COVENANT BIBLE PRESBYTERIAN CHURCH OF INDIA,
BANGALORE

Copyright (c) 2013 by
Covenant Bible Presbyterian Church, Bangalore.

The contents of this book may be freely used fo non-commercial purposes, so long as they are quoted verbatim, and the source is identified and acknowledged.

பதிப்புரிமை (C) 2013
கவனென்ட் பைபிள் பிரஸ்பைட்டேரியன் சபை, பெங்களூர்.

இந்த புத்தகத்தின் பகுதிகளை நீங்கள் இலவசமாக உபயோகிக்கலாம். அப்படி உபயோகிக்கும் போது இதிலுள்ள வார்த்தைகளையோ, வசனங்களையோ மாற்றக்கூடாது. மேலும் இந்தப் புத்தகத்தின் விவரங்களையும் அங்கீகரித்து தெரிவிக்கவேண்டும்.

Printed in Bangalore, India
To receive printed copies of this book, contact the publisher
Covenant Bible Presbyterian Church,
101-102 Daadys Nest Layout,
Doddakannahalli,
Sarjapur Main Road,
Bangalore 560035, India
Email: covenantbpci@vsnl.net
Web: www.covenantbpci.com

# முன்னுரை

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவனுடைய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். பிராடெஸ்டென்ட் சீர்திருத்தத்திற்குப் (Protestant Reformation) பின்னர், 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா தேசங்களில் கேள்வி பதில் முறையின் மூலம் கிறிஸ்தவ கோட்பாடுகளை (Christian Doctrines) விளக்கி சபை மக்களுக்கு போதிக்கத் துவங்கினர். இந்த கேள்வி, பதில்களை சபை போதகர்கள் தாங்களுடைய சபை உறுப்பினர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களுக்குப் போதித்தனர் அப்படியே சபை மக்களும் இதை உபயோகப்படுத்தி தாங்கள் குழந்தைகளுக்கு கிறிஸ்தவ சத்தியங்களை கற்றுக்கொடுத்தனர். விசுவாசிகளின் குழந்தைகள் இவைகளை மனப்பாடம் செய்து உபயோகப்படுத்தினர் இந்த முறையான போதனையை காட்டகிஸம்(Catechism) அல்லது “ஞான உபதேச வினா விடை” என்று அழைக்கப்பட்டது. சில சபைகளில் இந்த பரிசுத்தமான பணியைச் செய்ய உபதேசியார்களை (Cate-chist) நியமித்தார்கள். இந்த வழக்கம் இன்றும் உலகில் அநேக திருச்சபைகளில் கடைபிடிக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட காட்டகிஸங்களில் முதன்மையானதாகவும், வேதத்தின் அடிப்படையில் துள்ளியமானதாகவும் கருதப்படுவது ‘வெஸ்ட்மினிஸ்டர் காட்டகிஸம் (Westminster Catechism) என்கிறதாகும். இது சிறிய, மற்றும் பெரிய வடிவங்களில் வெளியிடப்பட்டன. சிறிய காடகிஸத்தில் உள்ள (Shorter Catechism) கேள்வி பதில்களும், அதற்கு ஆதாரமான வேத வசனங்களுமே இந்த புத்தகத்தில்இடம்பெற்றுள்ளது.

இவைகளைப் படிப்பதால் கடைக்கும் பலன்கள் எராளம். அவைகளில் ஒரு சல காரியங்களை மட்டும் சுருக்கமாக இங்கு குறிப்பிடுவது பிரயோஜனப்படும்.

முதலாவதாக, நம்முடைய விசுவாசம் எந்த அடிப்படையில் அமைந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். சத்தியத்தை அறியாவிட்டால் எப்படி சரியாக விசுவாசிக்க முடியும்? எதை விசுவாசிக்கிறோம் என்பதை சரியாக அறியாவிட்டால் எப்படி நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் வளர முடியும்? வேதத்தின் அடிப்படையிலான கோட்பாடுகளை நன்றாக அறிந்தால் மட்டுமே நம்முடைய விசுவாசமானது நிலைத்து இருக்கக்கூடிய விசுவாசமாகவும் வளருகிற ஒரு விசுவாசமாகவும் இருக்க முடியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே சொன்னது, "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"' (யோவான் 8:32).

இரண்டாவதாக, கோட்பாடுகளை நன்றாக அறிந்தால் மட்டுமே நம்முடைய ஆவிக்குள்ளான வாழ்க்கை தேவன் விரும்புகிறபடி அமையும். நல்ல நெறிமுறைகளைக் கடைபிடித்து ஒழுக்கமாக வாழ்ந்தால் போதும், கோட்பாடுகள் அவசியம் இல்லை என்பது ஆபத்தான ஒரு நம்பிக்கை. மாறாக, நல்லபடியாக கோட்பாடுகளை அறிந்தால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை வேதத்தின்படி சிறப்பாக அமைய அதிக வாய்ப்பு உள்ளது. அப்போஸ்தலர்களும் தாங்களுடைய நிருப புத்தகளிலே பெரும் பகுதியில் கோட்பாடுகளையே எழுதினர். இறுதி அதிகாரங்களில் மட்டுமே நடைமுறை வாழ்விற்கான காரியாங்களை எழுதினர். ஆகவே, கோட்பாடுகளை நன்கு அறிந்தால், நமது ஆவிக்குரிய வாழ்க்கை அதிக நன்மையானதாகவும், மிகுந்த கனிகளை கொடுப்பதாகவும் இருக்கும். "வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளா -யிருக்கறது" (2 தீமோத்தேயு 3:6-17).

இறுதியாக கோட்பாடுகளை நன்றாக அறிந்தால் மட்டுமே தவறான போதனைகளிலிருந்து நம்மை காத்துக்கொள்ளமுடியும். கள்ள போதனைகளுக்கும், வஞ்சனைப் போதகர்களுக்கும் இக்காலத்தில் குறைவு இல்லை என்பது நாம். எல்லாரும் அறிந்ததே. இப்படிப்பட்ட நிலையில் வேதத்தின் அடிப்படையிலான. சத்தியங்களை நன்றாக அறிந்திருந்தால் மட்டுமே இவைகளிலிருந்து நம்மை காத்துக்கொள்ளமுடியும். விழிப்பாயிருங்கள், தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் என்று நம்முடைய இரட்சகரும், அப்போஸ்தலர்களும், வேதாகமத்தில் நமக்கு எச்சரித்திருப்பதை நாம் அசட்டை செய்வது மிகவும் ஆபத்தானதாகும். வேதம் சொல்வது, "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம். வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" (எபேசியர் 4:14).

கோட்பாடுகளை நன்றாக அறிந்து கொள்வது மட்டுமல்லாமல், அவைகளைக் கவனமாக கடை பிடிப்பதும் மிக அவசியம். சத்தியங்களை தெரிந்துகொள்ளும் நோக்கமே அவைகளை கடைபிடிக்கத்தானே! "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?"(லூக்கா 6:42) என்ற ஆண்டவருடைய கேள்வியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். பெருமை என்பது மிகவும் ஆபத்தானதாகும், "ஆகவே, நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் தருவசனத்தைக் கேட்கிறவர்களாய்-மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்கோபு 1:22).

இந்த புத்தகத்திலுள்ள வேதத்தின் அடிப்படையிலான கோட்பாடுகளைப் படித்து, வேதாகமத்தின் சத்தியங்களை உணர்ந்தால், உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை வேதத்தின் அடிப்படையில் நன்றாக அமையும் என்றும், கறிஸ்துவுக்குள்ளாக வளரும் என்றும் நிச்சயமாக நம்புகிறேன். "ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலக விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்" (2 பேதுரு 3:17-18)

# 1 மனிதனுடைய தலைமையான நோக்கம் என்ன?

மனிதனுடைய தலைமையான நோக்கம் தேவனை எப்பொழுதும் மகிமைபடுத்துவதும்[1] அவரிடத்தில் எப்பொழுதும் களிகூர்ந்து[2] இருப்பதுமேயாகும்.

1 சங்கீதம் 86, ஏசாயா 60:21, 1 கொரிந்தியர் 6:20; 10:31 வெளி 4:11, ரோமர் 11:36.
2 சங்கீதம் 16:5-11; 73:25-26; 144:15, ஏசாயா 12:2, லூக்கா 2:10, பிலிப்பியர் 4:4, வெளி 21:3-4.

# 2

## தேவனை மகிமைப்படுத்தவும் அவரிடத்தில் எப்பொழுதும் களிகூர்ந்து இருக்கவும் நம்மை வழிநடத்த தேவன் நமக்கு வழங்கியுள்ள வழிமுறை என்ன?

தேவனை மகிமைப்படுத்தவும் அவரிடத்தில் எப்பொழுதும் களிகூர்ந்திருக்கவும் நம்மை வழிநடத்த அவர் நமக்கு வழங்கியுள்ள ஒரே வழிமுறை தேவனுடைய வார்த்தை மட்டுமே[1] அவருடைய வார்த்தை பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு புத்தகங்களைக் கொண்ட பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியுள்ளது[2].

---

1 உபாகமம் 4:2, சங்கீதம் 19:7-11, ஏசாயா 8:20, யோவான் 15:11; 20:30-31, அப்போஸ்தலர் 17:11, 1 யோவான் 1:4, 2 தீமோத்தேயு 3:15-17.

2 மத்தேயு 19:4-5, ஆதியாகமம் 2:24, 1 கொரிந்தியர் 2:13, 1; 14:37, 2 பேதுரு 1:20-21; 3:2, 15-16, லூக்கா 24:27,44.

# 3 வேதாகமம் பிரதானமாக எதை போதிக்கிறது?

மனிதன், தேவனைப்பற்றி நம்ப வேண்டியதைக் குறித்தும்[1], தேவன் மனிதனிடம் வேண்டுகிற கடமையைக் குறித்தும்[2] வேதாகமம் பிரதானமாக போதிக்கிறது.

1 ஆதியாகமம் 1:1, யோவான் 5:39; 20:31, ரோமர் 10:17, 2 தீமோத்தேயு 3:15.
2 உபாகமம் 10:12-13, சங்கீதம் 119:105, மீகா 6:8, 2 தீமோத்தேயு 3:16-17, யோசுவா 1:8.

# 4 தேவன் என்றால் என்ன?

தேவன் ஆவியானவர்[1], தம்முடைய தன்மையிலும்[2], ஞானத்திலும்[3], வல்லமையிலும்[4], பரிசுத்ததிலும்[5], நியாயத்திலும்[6], நன்மைகளிலும்[7] மற்றும் சத்தியத்திலும்[8] அளவில்லாதவரும்[9], நித்தியமானவரும்[10], மாறாதவருமானவர்[11].

1 உபாகமம் 4:15-19, லூக்கா 24:39-40, யோவான் 1:18; 4:24, அப்போஸ்தலர் 17:29.
2 சங்கீதம் 115:2-3, 1 தீமோத்தேயு 1:17; 6:15-16, யாத்திராகமம் 3:14
3 ரோமர் 11:33-34, எபிரெயர் 4:13, சங்கீதம் 104:24, 1 யோவான் 3:20.
4 ஆதியாகமம் 17:1, சங்கீதம் 62:11, மத்தேயு 19:26, வெளி 1:8, எரேமியா 32:17.
5 எபிரெயர் 1:13, 1 யோவான் 3:3,5, வெளி 15:4, 1 பேதுரு 1:15-16
6 ஆதியாகமம் 18:25, யாத்திராகமம் 34:6-7, சங்கீதம் 96:13, ரோமர் 3:5,26, உபாகமம் 32:4.
7 சங்கீதம் 103:5; 107:8-9, மத்தேயு 19:7, ரோமர் 2:4, யாத்திராகமம் 34:6.
8 யாத்திராகமம் 34:6, உபாகமம் 32:4, சங்கீதம் 86:15; 117:2, எபிரெயர் 6:18.
9 1 இராஜாக்கள் 8:27, சங்கீதம் 139:7-10; 145:3; 147:5, எரேமியா 23:24, ரோமர் 11:33-36.
10 உபாகமம் 33:27, சங்கீதம் 90:2, வெளி 1:4, 8 12, சங்கீதம் 102:12, 24-27
11 சங்கீதம் 33:11, மல்கியா 3:6, எபிரெயர் 1:12; 6:17-18; 13:8, யாக்கோபு 1:17

# 5 ஒன்றைவிட அதிகமான தேவர்கள் உண்டா?

இல்லை, மெய்யான ஜீவிக்கிற தேவன்[1] ஒருவர் மட்டுமே[2].

1 ஏசாயா 44:6; 45:21-22, 1 கொரிந்தியர் 8:4-6, உபாகமம் 6:4.
2 யோவான் 17:3, 1 தெசலோனிக்கேயர் 1:9-10, 1 யோவான் 5:20, எரேமியா 10:10.

# 6 தேவன் எத்தனை நபர்களாக இருக்கிறார்?

ஒரே தேவனாவார், பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவியாகிய மூன்று நபர்களாக இருக்கிறார். மூன்று நபர்கள் என்பதால் மூன்று தேவர்கள் கிடையாது[1]. ஒரே தேவனாகிய மூவரும் ஒரே தன்மையுடையவர்கள், வல்லமையிலும் மகிமையிலும் சமமானவர்கள்[2].

1 மத்தேயு 3:16-17; 28:19, 2 கொரிந்தியர் 13:14, 1 பேதுரு 1:2
2 சங்கீதம் 45:6, யோவான் 1:1; 17:5, அப்போஸ்தலர் 5:3-4, ரோமர் 9:5, கொலோசெயர் 2:9, யூதா 1:24-25. 1 யோவான் 5:7.

# 7 தேவன் தீர்மானித்த நியதிகள் யாவை?

**தேவனுடைய நித்திய நோக்கமும், அவருடைய சித்தத்தின் ஆலோசனையின்படி, அவர் தம்முடைய மகிமைக்காக, நடக்கக்கூடியவைகளை முன்கூட்டியே நிர்ணயித்திருப்பதே தேவன் தீர்மானித்த நியதிகளாகும்[1].**

1 சங்கீதம் 33:11, ஏசாயா 14:24, அப்போஸ்தலர் 2:23, எபேசியர் 1:11-12.

# 8 தேவன் தாம் தீர்மானித்த நியதிகளை எவ்வாறு செயல்படுத்துகிறார்?

**தேவன் சிருஷ்டிப்பின் கிரியைகள் மூலமாகவும், தம்முடைய நிர்வாகத்தின் கிரியைகள் மூலமாகவும், அவர் தீர்மானித்த நியதிகளை செயல்படுத்துகிறார்[1].**

1 சங்கீதம் 148:8-12, ஏசாயா 40:26, அப்போஸ்தலர் 4:24-28, வெளி 4:11, தானியேல் 4:35.

# 9 சிருஷ்டிப்பின் கிரியை என்றால் என்ன?

தேவன், தம்முடைய வார்த்தையின் வல்லமையினால் ஒன்றும் இல்லாத வெறுமையிலிருந்து எல்லாவற்றையும் உண்டாக்கியதும்[1], ஆறு நாட்களில் எல்லாவற்றையும் நன்றாக உண்டாக்கியதும் சிருஷ்டிப்பின் கிரியையாகும்[2].

1 ஆதியாகமம் 1:1, சங்கீதம் 33:6, 9, எபிரெயர் 11:3.

2 ஆதியாகமம் 1:31

# 10 தேவன் மனிதனை எவ்வாறு படைத்தார்?

தேவன், மனிதனை, ஆணும், பெண்ணுமாக தம்முடைய சாயலில்[1], அறிவுடனும்[2], நீதியுடனும், பரிசுத்தத்துடனும்[3], எல்லா படைப்பினங்களை ஆளும் உரிமையுடனும் படைத்தார்[4].

1 ஆதியாகமம் 1:27.
2 கொலோசேயர் 3:10.
3 எபேசியர் 4:24.
4 சங்கீதம் 8, ஆதியாகமம் 1:28.

# 11 தேவனுடைய நிர்வாகத்தின் கிரியைகள் என்றால் என்ன?

தம்முடைய மேலான பரிசுத்தத்தினாலும்[1], ஞானத்தினாலும்[2], வல்லமையாக[3] அவருடைய படைப்புகளையும் அவைகளின் செயல்களையும்[4] பாதுகாத்து வருவதும்[5], ஆளுகை செய்து வருவதும்[6] அவருடைய நிர்வாகத்தின் கிரியைகளாகும்.

1 சங்கீதம் 145:17.
2 சங்கீதம் 104:24
3 எபிரெயர் 1:3.
4 சங்கீதம் 36:6, நீதிமொழிகள் 16:33, மத்தேயு 10:30.
5 நெகேமியா 9:6.
6 எபேசியர் 1:19-23, சங்கீதம் 103:19

# 12 மனிதன் படைக்கப்பட்ட நிலையில் இருக்கும்பொழுது, தேவனுடைய நிர்வாகத்திலே, அவர் மனிதனோடு செய்த விசேஷித்த காரியம் என்ன?

தேவன் மனிதனை படைத்த பின்னர், மனிதனோடு ஒரு ஜீவனின் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். நன்மை தீமை அறியத்தக்கதான விருட்சத்தின் கனியை புசிக்க தடை செய்து, புசித்தால் மரிப்பாய் என்ற நிபந்தனையை விதித்தார். இந்த ஜீவன் மரணம் என்ற ஏற்பாடானது கீழ்படிதலின் நிபந்தனைக்குள்ளாக செய்யப்பட்டது[1].

1 யாக்கோபு 2:10, ஆதியாகமம் 2:16-17.

# 13 நம்முடைய முதற்பெற்றோர், அவர்கள் படைக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தார்களா?

இல்லை. நம்முடைய முதற்பெற்றோர், தாங்களுடைய சுய சித்தத்தின் சுதந்திரத்தில், தாங்கள் படைக்கப்பட்ட நிலையில் இருக்கும்பொழுது, தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து வீழ்ந்தனர்[1].

1 2 கொரிந்தியர் 11:3, ஆதியாகமம் 3:6-8.

# 14 பாவம் என்றால் என்ன?

பாவம் என்பது தேவனுடைய நியாயப்பிரமாணங்களை மீறுவதும், தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்கு ஏற்றபடி நடவாமல் இருப்பதுமாகும்[1].

1 லேவியராகமம் 5:17, யாக்கோபு 4:17, 1 யோவான் 3:4.

# 15 நம்முடைய முதற்பெற்றோர், தாங்கள் படைக்கப்பட்ட நிலையில் இருந்து வீழ்ந்த பாவம் என்ன?

புசிக்கக்கூடாது என்று தடைசெய்யப்பட்ட கனியை புசித்ததே நம்முடைய முதற்பெற்றோர், தாங்கள் படைக்கப்பட்ட நிலையில் இருந்து வீழ்ந்த பாவம் ஆகும்[1].

1 ஆதியாகமம் 3:6.

# 16 ஆதாமுடைய மீறுதலினால் மனித குலம் முழுவதும் வீழ்ந்ததா?

ஆம். ஆதாமோடு செய்யப்பட்ட உடன்படிக்கையானது, அவனுக்கு மாத்திரமல்லாமல், அவனுக்கு பின் வந்த சந்ததியாகிய எல்லா மனித குலத்துக்கும் சேர்ந்ததாகும்[1]. எல்லா மனிதர்களும் ஆதாமிலிருந்து வருகிற சந்ததியாயிருக்கிறதினால், ஆதாமுடைய முதல் மீறுதலினாலே எல்லா மனிதர்களும் அவனோடு பாவம் செய்து, அவனோடு வீழ்ந்தனர்[2].

1 ஆதியாகமம் 2:16-17, யாக்கோபு 2:10.
2 1 கொரிந்தியர் 15:22, ரோமர் 5:12-21.

## 17 அந்த வீழ்ச்சி மனித குலத்தை எந்த நிலைக்கு கொண்டு வந்தது?

அந்த வீழ்ச்சியானது மனித குலத்தை பாவமான நிலைக்கும், பெருந்துயரமான நிலைக்கும் கொண்டு வந்தது[1].

1 ஆதியாகமம் 3:16-19, ரோமர் 3:16.

# 18 பாவத்தினால் வீழ்ந்த மனிதனுடைய அந்த நிலை எப்படிப்பட்டது?

இந்த நிலையிலே, ஆதாமின் முதற்பாவத்தினால் ஏற்பட்ட குற்ற உணர்வு[1], ஆதியில் இருந்த அந்த நீதியின் மீதான தாக்கம்[2], மனிதனுடைய முழு சுபாவத்தின் தூய்மைக்கேடு (ஆதிபாவம் என்று பொதுவாக அழைக்கப்படுவது)[3] ஆகியவைகளும், மேலும் இவைகளினால் வெளிப்படுகிற அனைத்து மீறுதல்களும்[4] உள்ளது.

1 ரோமர் 5:19
2 கொலோசேயர் 3:10, எபேசியர் 4:24, ரோமர் 3:10-12.
3 சங்கீதம் 51:5, யோவான் 3:6, ரோமர் 3:18; 8:7-8, எபேசியர் 2:3.
4 சங்கீதம் 53:1-3, மத்தேயு 15:19, ரோமர் 3:10-18, 23-24, யாக்கோபு 1:14-15, ஆதியாகமம் 6:5-6, கலாத்தியர் 5:19-21.

# 19 மனிதன் வீழ்ந்த அந்த நிலைமையின் கொடுந்துயரம் என்ன?

எல்லா மனிதர்களும் தங்களுடைய வீழ்ச்சியினால், தேவனோடு இருந்த ஐக்கியத்தை இழந்தனர்[1], அவருடைய உக்கிர கோபத்துக்கும்[2], சாபத்துக்கும்[3] ஆளானார்கள். ஆகவே, இந்த வாழ்க்கையின் எல்லா கொடுந்துயரத்துக்கும்[4], மரணத்துக்கும்[5], நரகத்தின் வேதனைகளுக்கும் நித்திய காலத்துக்கும் ஆளாக நேர்ந்தது[6].

1 ஆதியாகமம் 3:8, 24, யோவான் 8:34, 42, 44, எபேசியர் 2:12, 4:18-19.
2 எபேசியர் 2:3, 5:6, யோவான் 3:36, ரோமர் 1:18.
3 வெளி 22:3, கலாத்தியர் 3:10.
4 ஆதியாகமம் 3:16-19, யோபு 5:7, ரோமர் 8:18-23, பிரசங்கி 2:22-23.
5 எசேக்கியேல் 18:4, ரோமர் 5:12, 6:23.
6 மத்தேயு 25:41, 46, வெளி 14:9-11, 2 தெசலோனிக்கேயர் 1:10.

# 20 மனிதனை பாவமான, கொடுந்துயரமான நிலையில் அழிந்துபோக தேவன் விட்டுவிட்டாரா?

தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, நித்திய காலத்துக்கு முன்னே நித்திய ஜீவனுக்கு சிலரை தெரிந்தெடுத்து[1], வீழ்ந்த அந்த பாவமான, கொடுந்துயரமான நிலையில் இருந்து விடுவித்து, இரட்சிப்பின் நிலைக்கு ஒரு மீட்பர் மூலமாக கொண்டுவருதற்கு கிருபையின் உடன்படிக்கையை ஏற்படுத்தினார்[2].

1 அப்போஸ்தலர் 13:48, 2 தெசலோனிக்கேயர் 2:13-14, எபேசியர் 1:4-6.

2 ஆதியாகமம் 3:15, 17:7, யாத்திராகமம் 19:5-6, எரேமியா 31:31-34, மத்தேயு 20:28, 1 கொரிந்தியர் 11:25, எபிரெயர் 9:15.

## 21 தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் மீட்பர் யார்?

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் ஒரே மீட்பர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே[1]. தேவனுடைய நித்திய குமாரனாகிய அவர்[2], மனிதனாகி[3], தேவனாகவும் மனிதனாகவும் இரண்டு வேறுபட்ட இயல்புகளில், ஒரே நபராக இருந்துவருகிறவரும், என்றென்றைக்கும் இருக்கிறவருமானவர்[4].

1 யோவான் 14:6, அப்போஸ்தலர் 4:12, 1 தீமோத்தேயு 2:5-6.

2 சங்கீதம் 2:7, மத்தேயு 17:5, 3:17, யோவான் 1:18.

3 ஏசாயா 9:6, மத்தேயு 1:23, யோவான் 1:14, கலாத்தியர் 4:4-5.

4 எபிரெயர் 7:24-25, அப்போஸ்தலர் 1:10-11.

# 22 கிறிஸ்து, தேவனுடைய குமாரனாக இருந்து எவ்வாறு மனிதனானார்?

தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து, பரிசுத்த ஆவியின் வல்லமையினால், கன்னிகை மரியாளின் கருப்பையில் உற்பவித்து[1], தமக்கென்று ஒரு மெய்யான சரீரத்தையும், நியாயமான ஆத்துமாவையும் எடுத்துக்கொண்டு, மனிதனாகி, பாவம் இல்லாமல் பிறந்தார்[2].

1 லூக்கா 1:27, 31, 35.
2 எபிரெயர் 2:14-15, 17, பிலிப்பியர் 2:7.

# 23 கிறிஸ்து நம்முடைய மீட்பராக என்ன பணிகளை செயல்படுத்துகின்றார்?

கிறிஸ்து, நம்முடைய மீட்பராக, ஒரு தீர்க்கதரிசியின் பணிகளை[1], ஒரு ஆசாரியரின் பணிகளை[2], ஒரு அரசரின் பணிகளை[3], தன்னுடைய தாழ்மையான மற்றும் மேன்மையான நிலையிலிருந்து செயல்படுத்துகிறார்.

1 யாத்திராகமம் 18:18, எபிரெயர் 1:1-2, 4:15, 7:26, 1 யோவான் 3:5.
2 எபிரெயர் 5:5-6, 4:14-15.
3 ஏசாயா 9:6-7, யோவான் 18:37, 1 கொரிந்தியர் 15:25, லூக்கா 1:32-33.

# 24 கிறிஸ்து எவ்வாறு ஒரு தீர்க்கதரிசியின் பணிகளை செயல்படுத்துகின்றார்?

கிறிஸ்து தம்முடைய வார்த்தையிலும்[1], ஆவியிலும்[2], நம்முடைய இரட்சிப்புக்காக தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தி[3], ஒரு தீர்க்கதரிசியின் பணிகளை செயல்படுத்துகின்றார்.

1 அப்போஸ்தலர் 1:1-2, எபிரெயர் 2:3, லூக்கா 4:18-19, 21.
2 அப்போஸ்தலர் 1:8, 1 பேதுரு 1:11, யோவான் 15:26-27.
3 யோவான் 4:41-42, 20:30-31.

# 25 கிறிஸ்து எவ்வாறு ஒரு ஆசாரியரின் பணிகளை செயல்படுத்துகின்றார்?

கிறிஸ்து தேவனுடைய நீதியை திருப்திபடுத்த, ஒரே தரம் தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்து[1], நம்மை தேவனோடு ஒப்புரவாகச்செய்து[2], நமக்காக இடைவிடாது வேண்டுதல் செய்துகொண்டும்[3], ஒரு ஆசாரியரின் பணிகளை செயல்படுத்துகின்றார்.

1 ஏசாயா 53, அப்போஸ்தலர் 8:32-35, எபிரெயர் 9:26-28, 10:12-13.

2 ரோமர் 5:10-11, 2 கொரிந்தியர் 5:18, கொலோசெயர் 1:21-22.

3 ரோமர் 8:34, எபிரெயர் 9:24, 7:25.

# 26 கிறிஸ்து எவ்வாறு ஒரு அரசரின் பணிகளை செயல்படுத்துகின்றார்?

நம்மை அவருக்கு அடிபணியச்செய்தும், நம்மை ஆளுகை செய்துகொண்டும், நம்மை பாதுகாத்துக் கொண்டும்[1], தம்முடைய எதிரிகளையும் நம்முடைய எதிரிகளையும் அடக்கி வைத்துக்கொண்டும், அவர்களை மேற்கொண்டும்[2], கிறிஸ்து ஒரு அரசரின் பணிகளை செயல்படுத்துகின்றார்.

1 சங்கீதம் 110:3, மத்தேயு 28:18-20, யோவான் 17:2, கொலோசேயர் 1:13.
2 சங்கீதம் 2:6-9, 110:1-2, மத்தேயு 12:28, 1 கொரிந்தியர் 15:24-26, கொலோசேயர் 2:15.

# 27 கிறிஸ்துவின் தாழ்மை எங்கு வெளிப்படுகிறது?

கிறிஸ்துவின் பிறப்பிலும், அதுவும் ஒரு கீழான நிலையிலே[1], நியாயப்பிரமாணத்திற்குள்ளாக ஆக்கப்பட்டதிலும்[2], இந்த வாழ்க்கையின் கொடுந்துயரத்துக்கும்[3], தேவனுடைய உக்கிர கோபத்துக்கும்[4], சிலுவையின் சபிக்கப்பட்ட மரணத்துக்கு உட்படுத்தப்பட்டதிலும்[5], அடக்கம் பண்ணப்பட்டதிலும், மரணத்தின் பிடியில் சிறிது நேரம் தொடர்ந்ததிலும்[6], கிறிஸ்துவின் தாழ்மை வெளிப்படுகிறது.

1 லூக்கா 2:7, கலாத்தியர் 4:4-5, 2 கொரிந்தியர் 8:9.
2 கலாத்தியர் 4:4-5.
3 ஏசாயா 53:3, எபிரெயர் 2:18, யோவான் 4:6, 11:35, லூக்கா 9:58.
4 சங்கீதம் 22:1, ஏசாயா 53:10, 1 யோவான் 2:2, மத்தேயு 27:46.
5 கலாத்தியர் 3:13, பிலிப்பியர் 2:8
6 1 கொரிந்தியர் 15:3-5, மத்தேயு 12:40.

# 28 கிறிஸ்துவின் மேன்மை எங்கே வெளிப்படுகிறது?

அவர் மரித்தோரிலிருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததிலும்[1], பரலோகத்துக்கு ஏறிச்சென்றதிலும்[2], பிதாவாகிய தேவனுடைய வலதுபுறத்தில் அமர்ந்திருப்பதிலும்[3], கடைசி நாளில் இவ்வுலகை நியாயந்தீர்க்க வருவதிலும்[4], கிறிஸ்துவின் மேன்மை வெளிப்படுகிறது.

1 1 கொரிந்தியர் 15:3-5
2 சங்கீதம் 68:18, எபேசியர் 4:8 அப்போஸ்தலர் 1:9-11
3 சங்கீதம் 110:1, அப்போஸ்தலர் 2:33-35, எபிரெயர் 1:3.
4 மத்தேயு 16:27, அப்போஸ்தலர் 17:31

# 29 கிறிஸ்து பெற்றுக்கொடுத்த மீட்பில் நாம் எவ்வாறு பங்குதாரர்கள் ஆகிறோம்?

கிறிஸ்து பெற்றுக்கொடுத்த மீட்பை, ஒரு ஆற்றல்வாய்ந்த விதத்தில், அவருடைய பரிசுத்த ஆவியினால், நம்மிலே செயல்படுத்துவதின் மூலம், நாம் அந்த மீட்பில் பங்குதாரர்கள் ஆகிறோம்[1].

1 தீத்து 3:4-7

# 30 ஆவியானவர் கிறிஸ்து பெற்றுக்கொடுத்த மீட்பை எவ்வாறு நம்மீது செயல்படுத்துகிறார்?

கிறிஸ்து பெற்றுக்கொடுத்த மீட்பை, ஆவியானவர் நம்மீது செயல்படுத்துவது எப்படியென்றால் - விசுவாசத்தின் கிரியைகளை நம்மிலே செய்வதின் மூலம்[1], நம்முடைய தேவ அழைப்பில் நம்மை கிறிஸ்துவோடு ஒன்று சேர்க்கிறார்[2].

1 ரோமர் 10:17, 1 கொரிந்தியர் 2:12-16, பிலிப்பியர் 1:29, எபேசியர் 2:8.
2 யோவான் 15:5, எபேசியர் 3:17-19, 1 கொரிந்தியர் 1:9.

# 31 ஆற்றல் வாய்ந்த அழைப்பு என்றால் என்ன?

ஆற்றல் வாய்ந்த அழைப்பு தேவனுடைய ஆவியின் கிரியையாகும்; இதிலே, அவர் நம்மை, நம்முடைய பாவத்தையும், நம்முடைய கொடுந்துயரமான நிலையையும் உணரச்செய்து, நம்முடைய நினைவுகளை கிறிஸ்துவின் அறிவிலே தெளிவுபடச்செய்து[1], நம்முடைய சித்தத்தைப் புதுப்பித்து[2], இலவசமாக சுவிஷேசத்தில் அளிக்கப்படுகிறதான இயேசு கிறிஸ்துவை[3] பெற்றுக்கொள்ளச்செய்து, அணைத்துக்கொள்ளச்செய்கிறார்[4].

1 அப்போஸ்தலர் 26:18, 1 கொரிந்தியர் 2:10, 12, எபேசியர் 1:17-19, 2 கொரிந்தியர் 4:6.

2 உபாகமம் 30:6-7, யோவான் 3:5, தீத்து 3:5, எசேக்கியேல் 36:26-27.

3 மத்தேயு 11:28-30, ஏசாயா 45:22, வெளி 22:17.

4 அப்போஸ்தலர் 16:14, யோவான் 6:44-45.

## 32 ஆற்றல்வாய்ந்த விதத்தில் அழைக்கப்பட்டவர்கள் இந்த வாழ்க்கையில் எப்படிப்பட்ட ஆதாயங்களில் பங்குதாரர்களாயிருக்கிறார்கள்?

ஆற்றல்மிக்க விதத்தில் அழைக்கப்பட்டவர்கள் இந்த வாழ்க்கையில், நியாயப்படுத்தப்படுதல், தத்தெடுத்துக்கொள்ளப்படுதல், சுத்திகரிக்கப்படுதல், மற்றும் இவைகளோடு வருகின்ற அல்லது இவைகளிலிருந்து வருகின்ற அநேக ஆதாயங்களில் பங்குதாரர்களாயிருக்கிறார்கள்[1].

1 1 கொரிந்தியர் 1:30, 6:11, ரோமர் 8:30, எபேசியர் 1:5-6.

# 33 நியாயப்படுத்தப்படுதல் என்றால் என்ன?

நியாயப்படுத்தப்படுதல் என்பது தேவனுடைய இலவசமான ஒரு கிருபையின் செயலாகும்[1]. இதிலே, அவர் நம்முடைய பாவங்களை எல்லாம் மன்னித்து[2], நம்மை அவருடைய பார்வையில் நீதிமானாக ஏற்றுக்கொள்கிறார்[3]. அவர் அப்படிச் செய்வது நமக்கு அளிக்கப்பட்ட கிறிஸ்துவின் நீதியின் நிமித்தம்[4], அதை ஏற்றுக்கொள்ளும் விசுவாசத்தின் மூலம் மட்டுமே[5].

1 ரோமர் 3:24.
2 2 கொரிந்தியர் 5:19, ரோமர் 4:6-8.
3 2 கொரிந்தியர் 5:21
4 ரோமர் 4:6, 5:19
5 பிலிப்பியர் 3:9-11, கலாத்தியர் 2:15.

# 34 தத்தெடுத்துக்கொள்ளப்படுதல் என்றால் என்ன?

தத்தெடுத்துக்கொள்ளப்படுதல் என்பது தேவனுடைய இலவசமான கிருபையின் செயலாகும். இதிலே, நாம் தேவனுடைய புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். மேலும் நாம் தேவனுடைய பிள்ளைகளுக்கு உண்டான எல்லா சலுகைகளிலும் ஒரு உரிமையை பெறுகிறோம்[1].

1 ரோமர் 8:17, 1 யோவான் 3:1.

# 35 சுத்திகரிக்கப்படுதல் என்றால் என்ன?

**சுத்திகரிக்கப்படுதல் என்பது தேவனுடைய இலவசமான கிருபையின் செயலாகும்[1]. இதிலே, நாம் தேவனுடைய சாயலுக்கு ஒப்பாக முழுமையான மனிதனாக புதுப்பிக்கப்படுகிறோம்[2]. மேலும் பாவத்திற்கு மரிக்கவும், நீதிக்குள்ளாக வாழவும் செய்யப்படுகிறோம்[3].**

1 பிலிப்பியர் 2:13, 2 தெசலோனிக்கேயர் 2:13, எசேக்கியேல் 36:27

2 2 கொரிந்தியர் 5:17, 1 தெசலோனிக்கேயர் 5:23, எபேசியர் 4:23-24.

3 எசேக்கியேல் 36:25-27, 2 கொரிந்தியர் 7:1, 1 பேதுரு 2:24 ரோமர் 6:4, 6, 12-14.

## 36 இந்த வாழ்க்கையில் நியாயப்படுத்தப்படுதல், தத்தெடுத்துக்கொள்ளப்படுதல், சுத்திகரிக்கப்படுதல், மற்றும் இவைகளோடு கூட வரும் அல்லது இவைகளிலிருந்து கிடைக்கும் ஆதாயங்கள் யாவை?

தேவனுடைய அன்பின் நிச்சயம்[1], மனசாட்சியில் சமாதானம்[2], பரிசுத்த ஆவியில் மகிழ்ச்சி[3], கிருபைகளின் அதிகரிப்பு[4], மற்றும் இறுதிவரை நிலைத்திருப்பது[5], ஆகியவைகள் இந்த வாழ்க்கையில், நியாயப்படுத்தப்படுதல், தத்தெடுத்துக்கொள்ளப்படுதல், சுத்திகரிக்கப்படுதல், மற்றும் இவைகளோடு கூட வரும் அல்லது இவைகளிலிருந்து வரும் ஆதாயங்களாகும்.

1 ரோமர் 5:5.
2 ரோமர் 5:1.
3 ரோமர் 14:17
4 2 பேதுரு 3:18.
5 1 பேதுரு 1:5, பிலிப்பியர் 1:5-6

# 37 விசுவாசிகள் மரணத்தின்போது கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஆதாயங்கள் யாவை?

மரணத்தின்போது விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் பரிசுத்தத்திலே பூரணமாக்கப்பட்டு[1], உடனடியாக மகிமைக்குள் கடந்து செல்லும்[2]. விசுவாசிகளின் சரீரமானது, கிறிஸ்துவோடு இணைந்து இருந்தாலும்[3], உயிர்த்தெழுதல் வரை அது கல்லறையில் இளைப்பாறும்[4].

1 எபிரெயர் 12:23-24.
2 லூக்கா 23:43, 2 கொரிந்தியர் 5:6, 8, பிலிப்பியர் 1:23.
3 1 தெசலோனிக்கேயர் 4:14.
4 தானியேல் 12:2, அப்போஸ்தலர் 24:15.

# 38 விசுவாசிகள் உயிர்த்தெழுதலின்போது கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஆதாயங்கள் யாவை?

உயிர்த்தெழுதலின்போது, விசுவாசிகள் மகிமையில் எடுத்துக்கொள்ளப்பட்டு[1], நியாயத்தீர்ப்பின் நாளில் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டு, விடுவிக்கப்படுவார்கள்[2]. மேலும், விசுவாசிகள் நித்திய காலத்துக்கும்[3], தேவனை முழுமையாக எப்பொழுதும் அனுபவித்துக்கொண்டு பூரணமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள்[4].

1 1 கொரிந்தியர் 15:42-43.
2 மத்தேயு 25:33-34, 46.
3 சங்கீதம் 16:11, 1 தெசலோனிக்கேயர் 4:17.
4 1 யோவான் 3:2, ரோமர் 8:29

# 39 தேவன் மனிதனிடமிருந்து எதிர்பார்க்கிற கடமை என்ன?

தேவன் மனிதனிடமிருந்து எதிர்பார்க்கிற கடமை, அவருடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்துக்குக் கீழ்படிந்து நடப்பதாகும்[1].

1 உபாகமம் 29:29, 1 யோவான் 5:2-3, மீகா 6:8.

# 40 கீழ்படிதலின் விதிமுறையாக தேவன் மனிதனுக்கு முதலாவதாக வெளிப்படுத்தியது என்ன?

கீழ்படிதலின் விதிமுறையாக தேவன் மனிதனுக்கு முதலாவதாக வெளிப்படுத்தியது அவருடைய நியாயப்பிரமாணங்கள் ஆகும்[1].

1 ரோமர் 2:14-15, 10:5

# 41 நியாயப்பிரமாணம் எங்கே முழுமையாகத் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது?

நியாயப்பிரமாணம் பத்து கட்டளைகளில் முழுமையாகத் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது[1].

1 மத்தேயு 10:17-19, உபாகமம் 4:13

# 42 பத்துக் கட்டளைகளின் தொகுப்பு என்ன?

பத்துக் கட்டளைகளின் தொகுப்பானது; நம் தேவனாகிய கர்த்தரை நம் முழு இருதயத்தோடும், நம் முழு ஆத்துமாவோடும், நம் முழு பெலத்துடனும், நம் முழு மனதுடனும் அன்புகூரவேண்டும் என்பதும், நம்மிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும் என்பதாகும்[1].

1 மத்தேயு 22:37-40.

# 43 பத்துக் கட்டளைகளின் முன்னுரை என்ன?

பத்துக் கட்டளைகளின் முன்னுரை இந்த வார்த்தைகளில் உள்ளன "உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே"[1].

1 யாத்திராகமம் 20:2, உபாகம் 5:6.

# 44 பத்துக் கட்டளைகளின் முன்னுரை நமக்கு என்ன போதிக்கிறது?

தேவன், நம்முடைய ஆண்டவராகவும் இரட்சகராகவும் இருப்பதினால், நாம் அவருடைய அனைத்து கட்டளைகளையும் கைக்கொள்ளும்படியான நிர்பந்தத்தில் இருக்கிறோம் என்பதையே பத்துக் கட்டளைகளின் முன்னுரை நமக்கு என்ன போதிக்கிறது[1].

1 1 பேதுரு 1:14-19, லூக்கா 1:71

# 45 முதலாம் கட்டளை என்ன?

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்பது முதலாம் கட்டளையாகும்[1].

1 யாத்திராகமம் 20:3, உபாகமம் 5:7.

# 46 முதலாம் கட்டளையில் என்ன வேண்டப்படுகிறது?

நம் கர்த்தரை நம்முடைய ஒரே மெய்யான தேவன் என்று அறிந்து கொள்ளவும், அங்கீகரிக்கவும் வேண்டும், மேலும், அதற்கு ஏற்றபடி நாம் அவரைத் தொழுதுகொள்ளவும், மகிமைப்படுத்தவும் வேண்டும், என்று முதலாம் கட்டளையில் வேண்டப்படுகிறது[1].

1 ஏசாயா 45:20-25, 1 நாளாகமம் 28:9

# 47 முதலாம் கட்டளையில் என்ன தடைச்செய்யப்பட்டுள்ளது?

கர்த்தரே நம்முடைய[1] ஒரே மெய்யான தேவன் என்பதை மறுப்பதும்[2], அவரைத் தொழுதுகொள்ளாமல் இருப்பதும், அவரை மகிமைப்படுத்தாமல் இருப்பதும்[3], அல்லது அவருக்கு மட்டுமே உரியதான ஸ்தோத்திரத்தையும், மகிமையும் வேறொன்றுக்கு கொடுப்பதும்[4] முதலாம் கட்டளையில் தடைச்செய்யப்பட்டுள்ளது.

1 சங்கீதம் 81:10-11.
2 சங்கீதம் 14:1.
3 ரோமர் 1:20-21.
4 எசேக்கியேல் 8:16-18, ரோமர் 1:25.

# 48 முதலாம் கட்டளையில் "எனக்கு முன்னே" என்கிற வார்த்தைகள் விஷேசமாக என்ன போதிக்கின்றன?

எல்லாவற்றையும் காண்கிற தேவன், அந்நிய தேவர்களைச் சேவிக்கும் பாவத்தை அறிந்து அதிக வெறுப்படைகிறார், என்பதையே முதலாம் கட்டளையில் "எனக்கு முன்னே" என்கிற வார்த்தைகள் விஷேசமாக போதிக்கின்றன[1].

1 உபாகமம் 30:17-18, எசேக்கியேல் 8:12, சங்கீதம் 44:20-21

# 49 இரண்டாம் கட்டளை என்ன?

"மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக்குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்." என்பது இரண்டாம் கட்டளையாகும்[1].

1 யாத்திராகமம் 20:4-6, உபாகமம் 5:8-10.

## 50 இரண்டாம் கட்டளையில் என்ன வேண்டப்படுகிறது?

தேவன், அவருடைய வார்த்தையிலே நியமித்துள்ள அவருடைய எல்லா ஆணைகளையும், அவரைத் தொழுதுகொள்ளுவதையும், நாம் தூய்மையாக, முழுமையாக ஏற்றுக்கொள்ளவும், கடைபிடிக்கவும், காத்துக்கொள்ளவும் இரண்டாம் கட்டளையில் வேண்டப்படுகிறது[1].

1 மத்தேயு 28:20, உபாகமம் 12:32.

# 51 இரண்டாம் கட்டளையில் என்ன தடைசெய்யப்பட்டுள்ளது?

தேவனை உருவங்கள் மூலம் தொழுவதும்[1], அவருடைய வார்த்தையில் நியமிக்கப்படாத வழிகளில் தொழுவதும்[2], இரண்டாம் கட்டளையில் தடைசெய்யப்பட்டுள்ளது.

1 உபாகமம் 4:15-19, ரோமர் 1:22-23.

2 லேவியராகமம் 10:1-2, எரேமியா 19:4-5, கொலோசேயர் 2:18-23.

# 52 இரண்டாம் கட்டளையில் பின் இணைக்கப்படும் காரணங்கள் யாவை?

தேவன், நம்மீது கொண்டுள்ள சர்வாதிகாரம்[1], நம்மீது அவருக்குள்ள முழு உரிமை[2], அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்பதில் அவர் கொண்டுள்ள வைராக்கியம்[3], ஆகியவை இரண்டாம் கட்டளையில் பின் இணைக்கப்படும் காரணங்கள் ஆகும்.

1 சங்கீதம் 95:2-3, 6-7, 96:9-10.
2 யாத்திராகமம் 19:5, சங்கீதம் 45:11, ஏசாயா 54:5.
3 1 கொரிந்தியர் 10:22, யாத்திராகமம் 34:14.

# 53 மூன்றாம் கட்டளை என்ன?

"உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்" என்பது மூன்றாம் கட்டளையாகும்[1].

1 யாத்திராகமம் 20:7, உபாகமம் 5:11.

# 54 மூன்றாம் கட்டளையில் என்ன வேண்டப்படுகிறது?

தேவனுடைய நாமங்களை[1], தன்மைகளை[2], ஆணைகளை[3], வார்த்தைகளை[4], கிரியைகளை[5], மிகுந்த பரிசுத்தமாகவும், மிகுந்த பயபக்தியாகவும் அனுசரிக்க மூன்றாம் கட்டளையில் வேண்டப்படுகிறது.

1 சங்கீதம் 29:2, மத்தேயு 6:9, உபாகமம் 10:20.
2 1 நாளாகமம் 29:10-13, வெளி. 15:3-4.
3 அப்போஸ்தலர் 2:42, 1 கொரிந்தியர் 11:27-28.
4 வெளி. 22:18-19, சங்கீதம் 138:2.
5 வெளி. 4:11, சங்கீதம் 107:21-22.

# 55 மூன்றாம் கட்டளையில் என்ன தடைசெய்யப்பட்டுள்ளது?

தேவன், தம்மையே வெளிப்படுத்தியுள்ள எந்த காரியத்தையும், தரக்குறைவாகக் கையாளுவதையும், தவறாகப் பயன்படுத்துவதையும், மூன்றாம் கட்டளையில் தடைசெய்யப்பட்டுள்ளது[1].

1 மத்தேயு 5:33-37, யாக்கோபு 5:12, லேவியராகமம் 19:12.

# 56 மூன்றாம் கட்டளையில் பின் இணைக்கப்படும் காரணம் என்ன?

இந்த கட்டளையை மீறுகிறவர்கள், மனிதர்களின் தண்டனையிலிருந்து எப்படியாவது தப்பித்துக்கொண்டாலும், நம்முடைய கர்த்தராகிய தேவன் அவர்களை தம்முடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள அனுமதிக்கமாட்டார் என்பதே மூன்றாம் கட்டளையில் பின் இணைக்கப்படும் காரணம் ஆகும்[1].

1 1 சாமுவேல் 3:13, 4:11, உபாகமம் 28:58-61.

# 57 நான்காம் கட்டளை என்ன?

"ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதில் நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்." என்பது நான்காம் கட்டளையாகும்[1].

1 யாத்திராகமம் 20:8-11, உபாகமம் 5:12-15.

# 58 நான்காம் கட்டளையில் என்ன வேண்டப்படுகிறது?

தேவன், தம்முடைய வார்த்தையில் நியமித்திருக்கும்படி, குறித்த நேரங்களை அவருக்கு பரிசுத்தமாக கைக்கொள்ள வேண்டும்; குறிப்பாக வாரத்தின் ஏழு நாட்களில் ஒரு நாளை அவருக்கென்று பரிசுத்த ஓய்வு நாளாகக் கைக்கொள்ள வேண்டும் என்று நான்காம் கட்டளையில் வேண்டப்படுகிறது[1].

1 யாத்திராகமம் 31:13, 16-17.

# 59 ஏழு நாட்களில் எந்த நாளை பரிசுத்த ஓய்வு நாளாக நியமித்தார்?

உலகம் துவங்கியது முதல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரை வாரத்தின் ஏழாவது நாளைப் பரிசுத்த ஓய்வு நாளாக நியமித்தார்[1], அதன் பின்னர் உலகத்தின் முடிவு வரை தொடர்ந்திட வாரத்தின் முதல் நாளை பரிசுத்த ஓய்வு நாளாக நியமித்தார்[2].

1 ஆதியாகமம் 2:2-3, யாத்திராகமம் 20:11.
2 மாற்கு 2:27-28, 1 கொரிந்தியர் 16:2, அப்போஸ்தலர் 20:7, வெளி. 1:10

# 60 பரிசுத்த ஓய்வு நாளை எவ்வாறு சுத்திகரிக்கவேண்டும்?

மற்ற நாட்களைப் போல நியாயமான உலகப்பிரகாரமான பணிகளிலோ, பொழுதுபோக்கு காரியங்களிலோ நேரத்தைச் செலவு செய்யாமல், பரிசுத்த ஓய்வு நாளை பரிசுத்தமான விதத்தில் இளைப்பாறி ஆசரிக்கவேண்டும்[1]. அத்தியாவசிய காரியங்கள் மற்றும் கருணையின் அடிப்படையிலான காரியங்களுக்கான நேரத்தை தவிர, பரிசுத்த ஓய்வு நாளின் நேரத்தை[2], தனிமையிலும், கிறிஸ்துவின் சபையிலும், தேவனை தொழுது கொள்ளுவதில் செலவிடவேண்டும்[3].

1 யாத்திராகமம் 20:10, நெகேமியா 13:15-22, ஏசாயா 58:13-14.
2 மத்தேயு 12:1-13.
3 லூக்கா 4:16, அப்போஸ்தலர் 20:7, யாத்திராகமம் 20:8, லேவியராகமம் 23:3.

# 61 நான்காம் கட்டளையில் என்ன தடைசெய்யப்பட்டுள்ளது?

செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் தவிர்ப்பது, அல்லது கடமைகளைக் கவனக்குறைவாக செய்வது, அல்லது சோம்பலாக நேரத்தை தரக்குறைவாக களிப்பது, அல்லது பாவமான காரியங்களை செய்வது, அல்லது நம்முடைய உலகப்பிரகாரமான வேலைகள், பொழுதுபோக்குகள் பற்றிய எண்ணங்களைச் சிந்திப்பது, வார்த்தைகளைப் பேசுவது, மற்றும் செயல்களில் நேரத்தை செலவிடுவது நான்காம் கட்டளையில் தடைச்செய்யப்பட்டுள்ளது[1].

1 நெகேமியா 13:15-22, ஏசாயா 58:13-14, ஆமோஸ் 8:4-6.

# 62 நான்காம் கட்டளையில் பின் இணைக்கப்படும் காரணங்கள் யாவை?

தேவன், வாரத்தில் ஆறு நாட்களை நம்முடைய சொந்த பணிகளுக்கு அனுமதித்து, ஏழாம் நாளை அவருக்காக ஓய்ந்திருக்கும் நாளாக ஒரு விசேஷித்த முறைமையை நமக்குக் கடைபிடிக்க ஏற்படுத்தியது[1], அவரே நமக்கு உதாரணமாக ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரித்து ஆசீர்வதித்தது, நான்காம் கட்டளையில் பின் இணைக்கப்படும் காரணங்கள் ஆகும்[2].

1 யாத்திராகமம் 31:15, 20:9, லேவியராகமம் 23:3.
2 ஆதியாகமம் 2:2-3, யாத்திராகமம் 20:11, 31:17.

# 63 ஐந்தாம் கட்டளை என்ன?

**"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" என்பது ஐந்தாம் கட்டளையாகும்[1].**

1 யாத்திராகமம் 20:12, உபாகமம் 5:16.

# 64 ஐந்தாம் கட்டளையில் என்ன வேண்டப்படுகிறது?

எல்லோரையும் நாம் மேலானவர்களாகவோ, கீழானவர்களாகவோ, சமமானவர்களாகவோ, அவர்களின் நிலைக்குத் தகுந்தபடியும், அவர்களின் உறவுக்கு ஏற்றபடியும், அவர்களைக் கனப்படுத்தி, அவர்களுக்குரிய மரியாதையைக் கொடுத்து, அவர்களுக்குரிய கடமைகளைச் செய்வது ஐந்தாம் கட்டளையில் வேண்டப்படுகிறது[1].

1 ரோமர் 13:1, 7, எபேசியர் 5:21-22, 24, 6:1, 4-6, 9, 1 பேதுரு 2:17.

# 65 ஐந்தாம் கட்டளையில் என்ன தடைசெய்யப்பட்டுள்ளது?

எல்லோரையும், அவர்களின் நிலைக்கு ஏற்றபடியும், உறவுக்கு ஏற்றபடியும் கனப்படுத்தாமல், அவர்களுக்குரிய மரியாதையை செலுத்தாமல், அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளுக்கு எதிரான காரியங்களைச் செய்வதும், அவைகளை நிராகரிப்பதும், ஐந்தாம் கட்டளையில் தடைசெய்யப்பட்டுள்ளது[1].

1 மத்தேயு 15:4-6, ரோமர் 13:8.

# 66 ஐந்தாம் கட்டளையில் பின் இணைக்கப்பட்டுள்ள காரியம் என்ன?

இந்த கட்டளையைக் கைக்கொள்பவர்களுக்கு நீடிய ஆயுளும், ஐசுவரியமும் (தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு நன்மையாகவும், தேவனை மகிமைப்படுத்தும் விதத்தில் இருக்குமேயானால்) வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளதே ஐந்தாம் கட்டளையில் பின் இணைக்கப்பட்டுள்ள காரியமாகும்[1].

1 யாத்திராகமம் 20:12, உபாகமம் 5:16, எபேசியர் 6:2-3.

# 67 ஆறாம் கட்டளை என்ன?

"கொலை செய்யாதிருப்பாயாக", என்பது ஆறாம் கட்டளையாகும்[1].

1 யாத்திராகமம் 20:13, உபாகமம் 5:17.

# 68 ஆறாம் கட்டளையில் என்ன வேண்டப்படுகிறது?

நம்முடைய ஜீவனையும் மற்றவர்களின் ஜீவனையும் பாதுகாக்க எல்லா நியாயமான பிரயாசங்களையும் மேற்கொள்ள, ஆறாம் கட்டளையில் வேண்டப்படுகிறது[1].

---

1 எபேசியர் 5:28-29.

# 69 ஆறாம் கட்டளையில் என்ன தடைசெய்யப்பட்டுள்ளது?

அநியாயமாக, நம்முடைய ஜீவனை எடுப்பதும், அயலானின் ஜீவனை எடுப்பதும், அல்லது இவைகளுக்கு எந்தவிதத்திலாவது காரணமான செயலைச் செய்வதும், ஆறாம் கட்டளையில் தடைசெய்யப்பட்டுள்ளது[1].

1 ஆதியாகமம் 9:6, 1 யோவான் 3:15, மத்தேயு 5:22.

# 70 ஏழாம் கட்டளை என்ன?

“விபச்சாரம் செய்யாதிருப்பாயாக” என்பது ஏழாம் கட்டளையாகும்[1].

1 யாத்திராகமம் 20:14, உபாகமம் 5:18.

# 71 ஏழாம் கட்டளையில் என்ன வேண்டப்படுகிறது?

நம்முடைய சொந்த புனிதத்தையும் மற்றவர்களின் புனிதத்தையும் நமது இருதயத்திலும் பேச்சிலும் நடத்தையிலும் காத்துக்கொள்ள வேண்டும் என்று ஏழாம் கட்டளையில் வேண்டப்படுகிறது[1].

1 1 கொரிந்தியர் 7:2-3, 5, 1 தெசலோனிக்கேயர் 4:3-6.

## 72 ஏழாம் கட்டளையில் என்ன தடைச்செய்யப்பட்டுள்ளது?

எல்லா அசுத்தமான சிந்தனைகளும், வார்த்தைகளும், செயல்களும், ஏழாம் கட்டளையில் தடைச்செய்யப்பட்டுள்ளது[1].

1 எபேசியர் 5:3-4, மத்தேயு 5:28

# 73 எட்டாம் கட்டளை என்ன?

"களவு செய்யாதிருப்பாயாக" என்பது எட்டாம் கட்டளையாகும்[1].

1 யாத்திராகமம் 20:15, உபாகமம் 5:19.

# 74 எட்டாம் கட்டளையில் என்ன வேண்டப்படுகிறது?

நம்முடைய மற்றும் பிறருடைய ஆஸ்திகளையும், அந்தஸ்தையும், நியாயமான விதத்தில் கொள்முதல்செய்யவும், மிகைப்படுத்தவும் எட்டாம் கட்டளையில் வேண்டப்படுகிறது[1].

1 லேவியராகமம் 25:35, எபேசியர் 4:28, பிலிப்பியர் 2:4.

# 75 எட்டாம் கட்டளையில் என்ன தடைச்செய்யப்பட்டுள்ளது?

நம்முடைய மற்றும் பிறருடைய ஆஸ்திகளுக்கும் அந்தஸ்திற்கும், இடையூறு செய்வது அல்லது இடையூறாக இருக்கும் எந்தச்செயலையும் செய்யாமலிருப்பதும் எட்டாம் கட்டளையில் தடைச்செய்யப்பட்டுள்ளது[1].

1 எபேசியர் 4:28, 2 தெசலோனிக்கேயர் 3:10, 1 தீமோத்தேயு 5:8, நீதிமொழிகள் 28:19.

# 76 ஒன்பதாம் கட்டளை என்ன?

**"பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக" என்பது ஒன்பதாம் கட்டளையாகும்[1].**

1 யாத்திராகமம் 20:16, உபாகமம் 5:20.

# 77 ஒன்பதாம் கட்டளையில் என்ன வேண்டப்படுகிறது?

நம்முடைய பெயருக்காக, பிறருடைய நற்பெயருக்காக, குறிப்பாக மனிதர்கள் மத்தியிலே நற்சாட்சியாக விளங்குவதற்காக[1], மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே உண்மையை நிலைப்படுத்தவும் மேன்மைப்படுத்தவும் வேண்டும் என்று ஒன்பதாம் கட்டளையில் வேண்டப்படுகிறது[2].

1 நீதிமொழிகள் 14:5, 25.

2 அப்போஸ்தலர் 25:10, 3 யோவான் 1:12, சகரியா 8:16.

# 78 ஒன்பதாம் கட்டளையில் என்ன தடைச்செய்யப்பட்டுள்ளது?

சத்தியத்துக்கு பாதகமான எல்லா காரியங்களும், நம்முடைய பெயருக்கு அல்லது பிறருடைய நற்பெயருக்கு கேடு விளைவிக்கும் எல்லா காரியங்களும் ஒன்பதாம் கட்டளையில் தடைச்செய்யப்பட்டுள்ளது[1].

1 லேவியராகமம் 19:16, சங்கீதம் 15:3, சகரியா 3:14, நீதிமொழிகள் 6:16-19.

# 79 பத்தாம் கட்டளை என்ன?

“பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்” என்பது பத்தாம் கட்டளையாகும்[1].

1 யாத்திராகமம் 20:17, உபாகமம் 5:21.

# ௮0 பத்தாம் கட்டளையில் என்ன வேண்டப்படுகிறது?

நாம் இருக்கும் நிலைமையில் முழு திருப்தியாக இருக்கவும்[1], மற்றவர்களோடு முறையாக பண்புடன் நடக்கவும், அவர்களுக்குள்ள எதையும் இச்சியாமல் இருக்கவும், பத்தாம் கட்டளையில் வேண்டப்படுகிறது[2].

1 சங்கீதம் 34:1, எபிரெயர் 13:5, பிலிப்பியர் 4:11.
2 லூக்கா 15:6, 9, 11-32, ரோமர் 12:15, பிலிப்பியர் 2:4.

# 81 பத்தாம் கட்டளையில் என்ன தடைச்செய்யப்பட்டுள்ளது?

நம்முடைய நிலைமையைக் குறித்த எந்தவித அதிருப்தியும்[1], மற்றவர்களுடைய நன்மைகளில் பொறாமை கொள்வதும், மற்றவர்களுடைய நன்மைகளில் கலக்கமடைவதும், அவர்களுக்குரியவைகளின் மீது ஆசைக்கொள்வதும், அவைகளுக்காகப் பிரயாசப்படுவதும், பத்தாம் கட்டளையில் தடைச்செய்யப்பட்டுள்ளது[2].

1 யாத்திராகமம் 3:14-17, 1 கொரிந்தியர் 10:10.
2 கொலோசேயர் 3:5, கலாத்தியர் 5:26.

# 82 தேவனுடைய கட்டளைகளை நேர்த்தியாக கடைபிடிக்க மனிதனால் இயலுமா?

மனிதனின் வீழ்ச்சிக்கு பின்னர், எந்த மனிதனாலும், இந்த வாழ்க்கையில் தேவனுடைய கட்டளைகளை நேர்த்தியாகக் கடைபிடிக்க இயலாது; மாறாக மனிதன் அனுதினமும் சிந்தனையிலும் வார்த்தையிலும் செயலிலும் அவைகளை மீறுகிறான்[1].

1 ஆதியாகமம் 8:21, ரோமர் 3:9, 23-24.

# 83 நியாயப்பிரமாணங்களின் எல்லா மீறுதல்களும் ஒரேயளவு கொடூரமானதா?

ஒருசில பாவங்கள், அவைகளின் தன்மையினாலும் அவைகளால் ஏற்படுகிற அநேக கேடுகளினாலும் தீங்குகளினாலும், தேவனுடைய பார்வையில் மற்ற பாவங்களை விட அதிக கொடூரமாகக் காணப்படுகின்றன[1].

1 எசேக்கியல் 8:6-10, 13-16, மத்தேயு 11:20-24, யோவான் 19:11.

# 84 ஒவ்வொரு பாவமும் எதற்கு தகுதி பெற்றது?

ஒவ்வொரு பாவமும், இந்த காலத்துக்கும் இனி வரும் காலத்துக்கும், தேவனுடைய கோபாக்கினைக்கும் அவருடைய சாபத்துக்கும், தகுதி பெற்றது[1].

1 மத்தேயு 25:41, எபேசியர் 5:6, கலாத்தியர் 3:10, யாக்கோபு 2:10.

## 85 பாவத்தினால் நமக்குரிய கோபாக்கினையிலிருந்தும் சாபத்திலிருந்தும் தப்பித்துக்கொள்ள தேவன் நம்மிடத்திலிருந்து என்ன வேண்டுகிறார்?

பாவத்தினால் நமக்குரிய கோபாக்கினையிலிருந்தும் சாபத்திலிருந்தும் தப்பித்துக்கொள்ள, இயேசு கிறிஸ்து மீதான விசுவாசத்தையும், ஜீவனுக்குரிய மனந்திரும்புதலையும்[1], மீட்பின் ஆதாயங்களைக் கிறிஸ்து நமக்கு வெளிப்படுத்தியுள்ள வழிமுறைகளை அதிக கவனமாக தளராமல் உபயோகிப்பதையும், தேவன் நம்மிடத்திலிருந்து வேண்டுகிறார்[2].

1 அப்போஸ்தலர் 20:21, மாற்கு 1:15.

2 1 கொரிந்தியர் 11:24-25, கொலோசெயர் 3:16-17, அப்போஸ்தலர் 2:38.

# 86 இயேசு கிறிஸ்து மீதான விசுவாசம் என்றால் என்ன?

இயேசு கிறிஸ்து மீதான விசுவாசம் ஒரு இரட்சிக்கும் கிருபையாகும்[1]; இது, சுவிசேஷத்தில் கிறிஸ்து அளிக்கப்பட்டபடி அவரை ஏற்றுக்கொண்டு இரட்சிப்புக்காக அவரை மட்டுமே சார்ந்திருப்பதாகும்[2].

1 ரோமர் 4:16, எபேசியர் 2:8-9.
2 யோவான் 20:30-31, பிலிப்பியர் 3:3-11, கலாத்தியர் 2:15-16.

# 87 ஜீவனுக்குரிய மனந்திரும்புதல் என்றால் என்ன?

ஜீவனுக்குரிய மனந்திரும்புதல் ஒரு இரட்சிக்கும் கிருபை[1]; ஒரு பாவி தன்னுடைய பாவத்தை மெய்யாக உணர்ந்து, கிறிஸ்து மூலமாக வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய கருணையை புரிந்துகொண்டு[2], தன்னுடைய பாவங்களுக்காக வருந்தி, பாவத்தை வெறுத்து, பாவத்திலிருந்து தேவனிடத்தில் திரும்பி[3], புதிய மனிதனாகத் தேவனுக்கு கீழ்படிய முழு நோக்கத்தோடு முயற்சி செய்வதாகும்[4].

1 2 தீமோத்தேயு 2:25-26, அப்போஸ்தலர்.

2 சங்கீதம் 51:1-4, லூக்கா 15:7, 10, அப்போஸ்தலர் 2:37, யோவேல் 2:13.

3 எரேமியா 31:18-19, லூக்கா 1:16-17, 1 தெசலோனிக்கேயர் 1:9-10.

4 2 நாளாகமம் 7:14, சங்கீதம் 119:57-64, மத்தேயு 3:8, 2 கொரிந்தியர் 7:10.

# 88 மீட்பின் ஆதாயங்களைக் கிறிஸ்து நமக்கு வெளிப்படுத்தும் வழிமுறைகள் யாவை?

மீட்பின் ஆதாயங்களைக் கிறிஸ்து நமக்கு வெளிப்படுத்தியுள்ள வழிமுறைகள், அவருடைய ஆணைகள், விசேஷமாக அவருடைய வார்த்தை, அவர் ஏற்படுத்திய பரிசுத்த சாக்கிரமந்துகள் (saraments), மற்றும் ஜெபம் ஆகும்; இவைகள் எல்லாம் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் இரட்சிப்புக்கு ஆற்றல் வாய்ந்ததாக்கப்படுகிறது[1].

1 அப்போஸ்தலர் 2:41-42, மத்தேயு 28:18-20.

# 89 வார்த்தை எவ்வாறு இரட்சிப்புக்கு ஆற்றல் வாய்ந்ததாக்கப்படுகிறது?

வேதத்தை வாசிப்பதின் மூலமும், விசேஷமாக வேதத்தை போதிப்பதின் மூலமும், தேவனுடைய ஆவியானவர், பாவத்தை உணர்த்தி பாவிகளை மனமாற்றவும், அவர்களைப் பரிசுத்தத்திலும் ஆறுதலிலும், விசுவாசத்தின் மூலம் இரட்சிப்புக்குக் கட்டி எழுப்பவும் செய்கிறார்[1].

1 நெகேமியா 8:8-9, அப்போஸ்தலர் 20:32, ரோமர் 10:14-17, 2 தீமோத்தேயு 3:15-17.

## 90 வார்த்தை இரட்சிப்புக்கு ஆற்றல் வாய்ந்ததாயிருப்பதால், அதை எவ்வாறு வாசிக்கவும் கேட்கவும் வேண்டும்?

வார்த்தை இரட்சிப்புக்கு ஆற்றல் வாய்ந்ததாயிருப்பதால், தேவனுடைய வார்த்தையை அதிக கவனமாக, தளராமல், ஆயத்தத்தோடு, ஜெபத்தோடு படிக்கவும், கேட்கவும் வேண்டும்[1], வார்த்தையை விசுவாசத்தோடு, அன்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும், அவருடைய வார்த்தைகளை நம்முடைய இருதயத்தில் பதித்துக்கொள்ள வேண்டும், மேலும் வார்த்தையை நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் கடைபிடிக்கவும் வேண்டும்[2].

1 உபாகமம் 6:16, சங்கீதம் 119:18, 1 பேதுரு 2:1-3.
2 சங்கீதம் 119:11, யாக்கோபு 1:22-25, 2 தெசலோனிக்கேயர் 2:10, எபிரெயர் 4:2.

# 91 பரிசுத்த சாக்கிரமந்துகள் (*sacraments*) எவ்வாறு இரட்சிப்புக்கு ஆற்றல் வாய்ந்ததாக்கப்படுகிறது?

பரிசுத்த சாக்கிரமந்துகளின் (scarements) வெளிப்படையான காரியங்களினாலோ அல்லது அவைகளை நிர்வாகம் செய்கிறவர்களினாலோ எந்த ஒரு நன்மையும் கிடையாது. அவைகள் கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தினால் மாத்திரம், விசுவாசிகளிலே கிரியை செய்யும் அவருடைய ஆவியினால் மட்டுமே பரிசுத்த சாக்கிரமந்துகள் இரட்சிப்புக்கு ஆற்றல் வாய்ந்ததாக்கப்படுகிறது[1].

1 1 கொரிந்தியர் 1:12-17, 1 கொலோசேயர் 3:7

# 92 பரிசுத்த சாக்கிரமந்து (*sacrament*) என்றால் என்ன?

பரிசுத்த சாக்கிரமந்து என்பது கிறிஸ்துவினால் ஏறபடுத்தப்பட்ட ஒரு பரிசுத்த ஆணையாகும்[1]; நியாயமான அடையாளங்களினால், கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின் சிலாக்கியங்கள், விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு, அளிக்கப்படுகிறது[2].

1 மத்தேயு 28:19-20, 26:26-28, மாற்கு 14:22-25, 1 கொரிந்தியர் 1:22-26, லூக்கா 22:19-20
2 கலாத்தியர் 3:27, 1 கொரிந்தியர் 10:16-17.

# 93 புதிய ஏற்பாட்டின் பரிசுத்த சாக்கிரமந்துகள் (*sacraments*) யாவை?

ஞானஸ்நானமும்[1] கர்த்தருடைய பந்தியும்[2] புதிய ஏற்பாட்டின் பரிசுத்த சாக்கிரமந்துகள் ஆகும்.

1 மத்தேயு 28:19-20.
2 1 கொரிந்தியர் 11:23-26.

# 94 ஞானஸ்நானம் என்றால் என்ன?

ஞானஸ்நானம் என்பது தேவனுடைய ஒரு பரிசுத்த சாக்கிரமந்து; பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் தண்ணீரிலே கழுவப்படுவதின் மூலமாக[1], கிறிஸ்துவுக்குள்ளாக நாம் ஒட்டி இணைக்கப்படுவதையும், கிருபையின் உடன்படிக்கையின் சிலாக்கியங்களுக்குப் பங்குதாரர்களாவதையும், கர்த்தருக்கென்று நாம் ஒப்பந்தமாக்கப்படுவதையும், குறிப்பிடுகிறதாகவும் முத்திரையிடப்படுகிறதாகவும் இருக்கிறது[2].

1 மத்தேயு 28:19-20.
2 அப்போஸ்தலர் 22:16, 2:38-42, ரோமர் 6:3-4, கலாத்தியர் 3:26-27, 1 பேதுரு 3:21.

# 95 ஞானஸ்நானம் யாருக்கு கொடுக்கப்படவேண்டும்?

**காணப்படுகிற சபைக்கு வெளியே இருப்பவர்களுக்கு, அவர்கள் கிறிஸ்துவின் மீதான தங்களுடைய விசுவாசத்தையும் தேவனுக்குக் கீழ்படிவதையும், அறிக்கையிடும் வரையில், ஞானஸ்நானம் கொடுக்கப்படக்கூடாது[1]; ஆனால் காணப்படுகிற சபையில் உறுப்பினர்களாக இருக்கும் விசுவாசிகளுடைய குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டும்[2].**

1 அப்போஸ்தலர் 2:38-41, 8:12, 32, 36, 18:8.
2 அப்போஸ்தலர் 16:32-33, ஆதியாகமம் 17:7, 9-11, கொலோசேயர் 2:11-12.

# 96 கர்த்தருடைய பந்தி என்றால் என்ன?

கர்த்தருடைய பந்தி என்பது ஒரு பரிசுத்தமான சடங்கு; இதில், கிறிஸ்து வழிகாட்டியபடி, அப்பத்தையும் திராட்சரசத்தையும் கொடுப்பதினாலும் ஏற்றுக்கொள்வதினாலும் அவருடைய மரணம் அறிக்கையிடப்படுகிறது[1]; அதை ஏற்றுக்கொள்ள தகுதியானவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய ஆரோக்கியத்துக்கும், கிருபையின் வளர்ச்சிக்கும், சரீரப்பிரகாரமாக அல்லாமல், விசுவாசத்தின் மூலம் அவருடைய சரீரத்திலும் இரத்தத்திலும், அவருடைய எல்லா நன்மைகளிலும் பங்குதாரர்களாக்கப்படுகிறார்கள்[2].

1 லூக்கா 22:19-20, 1 கொரிந்தியர் 11:23-26.
2 1 கொரிந்தியர் 10:16-17.

# 97 கர்த்தருடைய பந்தியை தகுதியுள்ளபடி ஏற்றுக்கொள்ள என்ன வேண்டியதாயிருக்கிறது?

கர்த்தருடைய பந்தியில் தகுதியுள்ளபடி பங்குகொள்கிறவர்கள், கர்த்தரின் சரீரத்தை நிதானித்து அறிகிற தங்களுடைய அறிவையும், கிறிஸ்துவின் விசுவாசத்திலே தங்களுடைய வளர்ச்சியையும், மனம்திரும்புதல் அன்பு கீழ்ப்படிதல் ஆகிய காரியங்களிலும் தங்களை நன்றாக சோதித்தறிந்து பங்குகொள்ளவேண்டும். கர்த்தருடைய பந்திக்கு தகுதியில்லாமல் அதிலே பங்குகொள்கிறவர்கள் தங்களுக்கு தானே நியாயத்தீர்ப்பைப் புசித்துக்கொள்கிறார்கள், நியாயத்தீர்ப்பை அருந்திக்கொள்கிறார்கள்[1].

1 1 கொரிந்தியர் 11:27-32.

## 98 ஜெபம் என்றால் என்ன?

தேவனிடத்தில் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு[1], அவருடைய கருணைகளை நன்றியோடு அங்கீகரித்து[2], அவருடைய சித்தத்துக்கு ஏற்ற காரியங்களுக்காக[3], நம்முடைய விருப்பங்களை கிறிஸ்துவின் நாமத்தில்[4] வேண்டுதல் செய்வது ஜெபமாகும்[5].

1 சங்கீதம் 32:5-6, தானியேல் 9:4-19, 1 யோவான் 1:9.
2 சங்கீதம் 136, 103:1-5.
3 1 யோவான் 5:14.
4 யோவான் 16:23-24.
5 சங்கீதம் 10:17, 62:8, மத்தேயு 7:7-8.

# 99 தேவன் நம்மை ஜெபத்தில் வழிகாட்ட எந்த ஒரு விதிமுறையைக் கொடுத்திருக்கிறார்?

தேவனுடைய வார்த்தை முழுவதும் நம்முடைய ஜெபங்களில் நம்மை வழிகாட்ட உபயோகமாக இருக்கிறது[1]; ஆனால் கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்த 'மாதிரி ஜெபம்', கர்த்தருடைய ஜெபம் என்று பொதுவாக அழைக்கப்படுகிற ஜெபமே விசேஷமான விதிமுறையாக கொடுக்கப்பட்டுள்ளது[2].

1 1 யோவான் 5:14.

2 மத்தேயு 6:9-13.

# 100 கர்த்தருடைய ஜெபத்தின் முன்னுரை நமக்கு என்ன கற்பிக்கின்றது?

"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என்கிற கர்த்தருடைய ஜெபத்தின் முன்னுரை நம்மை பரிசுத்தமாகவும், பயபக்தியோடும்[1], நம்பிக்கையோடும்[2], பிள்ளைகள் தகப்பனிடத்தில் வருவது போல[3], நமக்கு உதவி செய்ய வல்லவராகவும் தயாராகவும் இருக்கிற[4] தேவனிடத்தில் நெருங்கி சேரக் கற்பிக்கின்றது; மேலும் நாம் மற்றவர்களோடுச் சேர்ந்து ஜெபிக்கவும், மற்றவர்களுக்காக ஜெபிக்கவும் கற்பிக்கின்றது[5].

1 சங்கீதம் 95:6.
2 எபேசியர் 3:12.
3 லூக்கா 11:11-13, ரோமர் 8:15, மத்தேயு 7:9-11.
4 எபேசியர் 3:20-21.
5 எபேசியர் 6:18, 1 தீமோத்தேயு 2:1-2.

# 101 முதலாம் விண்ணப்பத்தில் எதற்காக ஜெபிக்கிறோம்?

"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்கிற முதலாம் விண்ணப்பத்தில், அவர் தம்மை வெளிப்படுத்தியிருக்கிற எல்லாவற்றிலும் அவர் மகிமைப்படவும்[1], எல்லா காரியங்களையும் தம்முடைய மகிமைக்காக நடத்தவும், தேவன் நம்மையும் மற்றவர்களையும் செயல்படச்செய்ய வேண்டுமென்று ஜெபிக்கிறோம்[2].

1 சங்கீதம் 67:1-3, 99:3, 100:3-4.
2 ரோமர் 11:33-36, வெளி. 4:11.

# 102 இரண்டாம் விண்ணப்பத்தில் எதற்காக ஜெபிக்கிறோம்?

**"உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்கிற இரண்டாம் விண்ணப்பத்தில், சாத்தானின் ராஜ்யம் அழிக்கப்படவும்[1], கிருபையின் ராஜ்யம் முன்னேற்றப்படவும்[2], நாமும் மற்றவர்களும் அதிலே கொண்டுவரப்படவும், அதிலே காத்துக்கொள்ளப்படவும்[3], மேலும் மகிமையின் ராஜ்யம் துரிதப்படவும்[4] ஜெபிக்கிறோம்.**

1 மத்தேயு 12:25-28, 1 யோவான் 3:8, ரோமர் 16:20.
2 சங்கீதம் 72:8-11, மத்தேயு 24:14, 1 கொரிந்தியர் 15:24-26.
3 சங்கீதம் 119:5, லூக்கா 22:32, 2 தெசலோனிக்கேயர் 3:1-2.
4 வெளி. 22:20.

# 103 மூன்றாம் விண்ணப்பத்தில் எதற்காக ஜெபிக்கிறோம்?

“உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்கிற மூன்றாம் விண்ணப்பத்தில், பரலோகத்திலிருக்கிற தேவதூதர்கள் செயல்படுவது போல[1], நாமும் எல்லா காரியங்களிலும் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளவும், அவருக்குக் கீழ்படியவும், அவருக்கு அடிபணிந்து நடக்கவும், தேவன் தம்முடைய கிருபையினால் நம்மையும் மற்றவர்களையும் செயல்படச்செய்ய வேண்டுமென்று ஜெபிக்கிறோம்[2].

1 சங்கீதம் 103:20-21, எபிரெயர் 1:14.
2 எபிரெயர் 13:20-21, சங்கீதம் 119, 19:14, 1 தெசலோனிக்கேயர் 5:23.

# 104 நான்காம் விண்ணப்பத்தில் எதற்காக ஜெபிக்கிறோம்?

**"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்கிற நான்காம் விண்ணப்பத்தில், தேவனுடைய இலவசமான அன்பளிப்பாக, இந்த வாழ்க்கையின் நன்மையான காரியங்களிலிருந்து உரிய பங்கை நாம் பெற்றுக்கொண்டு, அவருடைய ஆசீர்வாதத்தை அவைகளோடு அனுபவிக்கவும் ஜெபிக்கிறோம்[1].**

1 நீதிமொழிகள் 30:8-9, பிலிப்பியர் 4:11, 19, 1 தீமோத்தேயு 6:6-8, மத்தேயு 6:31-34.

# 105 ஐந்தாம் விண்ணப்பத்தில் எதற்காக ஜெபிக்கிறோம்?

“எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்” என்கிற ஐந்தாம் விண்ணப்பத்தில், நாம் கிறிஸ்துவின் நிமித்தம் தேவனிடத்தில், நம்முடைய பாவங்களை எல்லாம் தயவாக மன்னிக்க ஜெபிக்கிறோம்[1]; அவருடைய கிருபையினாலே நம்முடைய இருதயத்திலிருந்து மற்றவர்களை மன்னிக்க இயலுவதால் நம்மால் இதைத் தைரியமாகக் கேட்க முடிகிறது[2].

1 தானியேல் 9:17-19, 1 யோவான் 1:7, சங்கீதம் 51:1-2, 7, 9.
2 மத்தேயு 18:21-35, கொலோசேயர் 3:13, எபேசியர் 4:32.

# 106 ஆறாம் விண்ணப்பத்தில் எதற்காக ஜெபிக்கிறோம்?

"எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்'" என்கிற ஆறாம் விண்ணப்பத்தில், நாம் பாவம் செய்ய சோதிக்கப்படாதபடிக்கு நம்மை தேவன் காத்துக்கொள்ளவும்[1], அல்லது நாம் சோதிக்கப்படும்பொழுது நம்மைத் தாங்கி நம்மை விடுவிக்கவும் ஜெபிக்கிறோம்[2].

1 சங்கீதம் 19:13, யோவான் 17:15, மத்தேயு 26:41.

2 லூக்கா 22:31-32, 1 கொரிந்தியர் 10:13, 2 கொரிந்தியர் 12:7-9, எபிரெயர் 2:18.

# 107 கர்த்தருடைய ஜெபத்தின் முடிவுரை நமக்கு என்ன கற்பிக்கின்றது?

"ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்" என்கிற கர்த்தருடைய ஜெபத்தின் முடிவுரை, நாம் ஜெபிக்கும்பொழுது நம்முடைய தைரியத்தை தேவனிடமிருந்து மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும்[1], நம்முடைய ஜெபங்களில் அவரைப் போற்றித் துதித்து ராஜ்யத்தையும், வல்லமையும், மகிமையும் அவருக்கே செலுத்த வேண்டும் என்றும் கற்பிக்கின்றது[2] மேலும், நம்முடைய விருப்பங்களுக்கு சாட்சியாகவும், நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படும் என்கிற நிச்சயத்தினாலும், நாம் சொல்வது, ஆமென்[3].

1 தானியேல் 9:4, 7-9, 16-19, லூக்கா 18:1, 7-8.
2 1 நாளாகமம் 29:10-13, வெளி. 5:11-13, 1 தீமோத்தேயு 1:17.
3 1 கொரிந்தியர் 14:16, வெளி. 22:20.

# ஞான உபதேச வினாவிடை

**இந்த உபதேசத்தின் முதலாவது கேள்வி இப்படியாக துவங்குகிறது, “மனிதனுடைய தலைமையான நோக்கம் என்ன?” வேதாகமத்தின் அடிப்படையிலே இதற்கான பதில் இப்படியாக கொடுக்கப்படுகறது, “மனிதனுடைய தலைமையான நோக்கம் தேவனை எப்பொழுதும் மகிமைப்படுத்துவதும் அவரிடத்தில் எப்பொழுதும் களிகூர்ந்து: இருப்பதுமேயாகும்.**

இந்த மாதிரியாக கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் வாழ்க்கைக்கும் தேவையான அடிப்படையான கேள்விகளுக்கு பதில் தெரியாமல் விசுவாசிகள் தங்கள் வாழ்க்கை முழுவதும் தவிக்கும் நிலை இன்று சாதாரணமாகிவிட்டது. இப்படிப்பட்ட நிலைமையை தவிற்பதற்கே இந்த மாதிரியான ஞான உபதேச வினா விடைகள் பிராட்டஸ்ட்டன்ட் சபைகளில் உருவாக்கப்பட்டன. அந்த வகையில் வெஸ்ட்மினிஸ்ட்டர் காட்டகஸத்திற்கு நிகரானது எதுவும் இடையாது. இதை முழு வேதாகமத்தின் கோட்பாடுகளின் எளிதான சுறுக்கம் என்று சொன்னால் மிகையல்ல.

---

**வேதம் சொல்வது போல, “நீங்கள் கர்த்தராகிய இறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக”’ (கொலோசேயர் 2:6-7).**

---

To receive printed copies of this book, contact the publisher

**Covenant Bible Presbyterian Church,**
101-102 Daadys Nest Layout,
Doddakannahalli,
Sarjapur Main Road,
Bangalore 560035, India
covenantbpci@vsnl.net
www.covenantbpci.com